

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.11.2025) தலைமைச் செயலகத்தில், பாடகர் டாக்டர் சீர்காழி சிவ.சிதம்பரம் அவர்கள் சந்தித்து, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மந்தைவெளி கிழக்கு வட்ட சாலைக்கு தனது தந்தை இசைப்பேரறிஞர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டார். உடன், த.வேலு எம்.எல்.ஏ., சீர்காழி சிவ.சிதம்பரம் மகன் வருண் கோவிந்த் ஆகியோர் உள்ளனர்.



மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மைத்துனரும், தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் மாமாவும் ஆகிய முன்னாள் வேளாண் விற்பனை குழு தலைவர் கோ.தெட்சிணாமூர்த்தி அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு, மாவட்டக் கழகத்தின் சார்பில் கோவில்திருமாளத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு மாவட்டச் செயலாளர் பூண்டி. கே. கலைவாணன் எம்.எல்.ஏ தலைமையில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் வே.மனோகரன், கேப்டன்.எஸ்.எம்.செல்வராஜ், புலிவலம். ஏ.தேவா, சேகர் ஆர்.கலியபெருமாள், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ. எஸ்.குமார், இலக்கிய அணி பாலமுத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவில் ஒரு பகுதியாக வள்ளுவர் கோட்டத்தில் சென்னை முற்போக்கு புத்தகக் கண்காட்சி 2025 நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் (13.11.2025) மாலை நேர நிகழ்ச்சியாக துரை சந்திரசேகரனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி மற்றும் திரைப்படப் பாடலாசிரியர் கவிஞர் யுகபாரதியின் உரைவீச்சும் நடைபெற்றன. வாசகர்களும், பொதுமக்களும் ஆர்வத்துடன் பங்கேற்று நிகழ்வுக்கு வரவேற்பளித்தனர்.

### கழக சட்டத்துறை சார்பில்

# தமிழ்நாடு சட்டத்துறை மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள்- வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம்: ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவிப்பு!

சென்னை, நவ.15-

கழக தலைவர் - முதலமைச்சர், அவர்களின் ஆணைப்படி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு கழக சட்ட துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., கழக சட்டத்துறை இணைச் செயலாளர், வழக்கறிஞர் கே.எஸ்.இரவிச்சந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில், கழக சட்ட துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது. இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை ஆற்றுகிறார்.

அது சமயம் சட்ட துறை மாநில நிர்வாகிகள் ,மாவட்ட அமைப்பாளர்கள் (DLC), ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியின் இரண்டு CLC கள் மாவட்ட அரசு குற்றவியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள்(PP) மாவட்ட அரசு உரிமையியல் நீதிமன்ற வழக்கறிஞர்கள் (GP) ஆகியோர்கள் பங்கு பெறும் ஆலோசனை கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் நாளை (16.11.25) காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.

குறிப்பு: மேலே குறிப்பிட்ட அனைவருக்கும் தனி தனியாக வருகை பதிவேடு வைக்கப்பட இருப்பதால் அனைவரும் தங்களுடைய வருகையை உறுதிப்படுத்தி கொள்ளவும்.

அதுசமயம் மேலே குறிப்பிட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கழக சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என். ஆர்.இளங்கோ எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக பயணியர் நிழலகங்கள்!

## அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

திருவண்ணாமலை, நவ.15-

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2025) திருவண்ணாமலை மாவட்டத்தில் கடலூர் சித்தூர் சாலையில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக 9 இடங்களில் பயணியர் நிழலகங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**அதனை தொடர்ந்து பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-**

திருவண்ணாமலை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக கடலூர் சித்தூர் சாலை கி.மீ.84/7 104/2 வரை இருவழித்தடத்ததை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் பணி ரூ.140 கோடி மதிப்பீட்டில் கடந்த 2021-22ம் ஆண்டு முதலமைச்சரின் சாலை மேம்மபாடு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

இச்சாலையில் திருவண்ணமலை மாநகராட்சி தென்மாத்தூரில் 3 இடங்களிலும், சு.ஆண்டாப்பட்டு ஊராட்சி, அரடாப்பட்டு ஊராட்சி, பவித்திரம் ஊராட்சியில் 2 இடங்களிலும், பவித்திரம் புதூர், தி.கல்லேரி ஊராட்சி ஆகிய 9 இடங்களில் ரூ.1 கோடியே 35 இலட்சம் மதிப்பீட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் பயணியர் நிழலகங்கள் திறந்து வைக்கப்பட்டது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் சாலை மேம்மபாடு திட்டத்தை நிறுவி முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் நான்கு வழி சாலைகளை மேம்படுதும் பணிகள் நடைபெற்று வருகிறது. பொதுவாக நான்கு வழி சாலை என்பது மத்திய அரசால் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்தது. முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பின் பொது மக்கள் அதிகம் பயன்படுத்தும் சாலைகளை கண்டறிந்து நான்கு வழி சாலையாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டதை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் போக்குவரத்து அதிகம் உள்ள காரணத்தால் பல்வேறு சாலை மேம்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி கடலூர் சித்தூர் சாலை கி.மீ.84/7 104/2 வரை இருவழித்தடத்ததை நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்தல் 9 இடங்களில் கலைஞர் பயணியர் நிழலகங்களை கட்டி முடிக்கப்பட்டு இன்று முதல் மக்கள் பயன்பாட்டிற்குதிறக்கப்பட்டது என்று பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், திருவண்ணாமலை மாநகராட்சி துணை மேயர் ராஜாங்கம், மாநில தடகள சங்க துணைத் தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு அலுவலர் (தொழிற்நுட்பம்) ஆர்.சந்தர சேகரன், கண்காணிப்பு பொறியாளர் முரளி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் நேற்று முன்தினம் (13.11.2025) திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கல்லேரி ஊராட்சியில் நெடுஞ்சாலைத்துறை சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் பயணியர் நிழலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### “கற்றறிந்தோர் பார்வையில் கலைஞர் “ நூலில் இடம்பெற

# கல்வியாளர்கள் - ஆராய்ச்சியாளர்கள் கட்டுரைகளை அனுப்பலாம்!

## சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் வி.ஆர்.எஸ்.சம்பத் வேண்டுகோள்!

சென்னை, நவ.15-

சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முன்னாள் முதலமைச்சரும், தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் மூத்த தலைவருமான கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு சென்னை வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் “கற்றறிந்தோர் பார்வையில் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி” என்ற நூலினை கொண்டு வர திட்டமிட்டுள்ளோம்.

இந்த நூலில் கலைஞருடைய பணியைப் பார்த்து வியந்த தருணங்கள் கலைஞரால் கொண்டு வரப்பட்ட, நிறைவேற்றப்பட்ட கல்வி, உயர் கல்வி சமூக நிதி திட்டங்கள், கலைஞர் எழுதிய நூல்கள், கலைஞரின் தமிழ் வளர்ச்சி திட்டங்கள், கலைஞர் ஆற்றிய உரைகளின் மூலமாக கல்வி, சமூக நீதி பற்றிய கருத்துகள், சட்டமன்றத்தில் கலைஞரால் கொண்டு வரப்பட்ட முற்போக்கு சட்டங்கள், உயர்கல்வி, பள்ளிக் கல்வி ஒதுக்கீடுகள், சமூக நீதி எனப் பல்வேறு துறைகளில் கலைஞர் ஆற்றிய பணிகள், கலைஞருடன் பழகிய, விவாதித்த தருணங்கள் என பல் வேறு கருத்துகள் குறித்து நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், கல்வியாளர்கள், துணைவேந்தர்கள்,

தமிழ் அறிஞர்கள், புலவர்கள், கல்வி நிலையங் களை நிறுவியவர்கள், ஆராய்ச்சியாளர்கள், டாக்டர் பட்டம் பெற்ற எவரும், அவரவர் பார்வையில் ஏதாவது ஒரு தலைப்பில் கலைஞரைப் பற்றி கட்டுரைகளை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ 4 பக்கத்துக்கு குறையாமல் 10 பக்கத்துக்கு மிகாமல் ஏ4 (A4 SIZE) பக்க அளவில் தட்டச்சு செய்து பயன்படுத்திய பாண்டை(FONT)யும் சேர்த்து டிசம்பர் 10-ஆம் (10.12.2025) தேதிக்குள் சென்னை வளர்ச்சிக் கழக அலுவலகத்திற்கு இ-மெயில் (MDS_1981@YAHOO.COM) மூலமாக எழுதி அனுப்புமாறு சென்னை வளர்ச்சிக் கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத் கேட்டுக் கொண்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் 14.11.2025 நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” நடத்துவது குறித்து ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.ச.சண்முகம், கலைபண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி ச.வளர்மதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சுற்றுலாத் துறை ஆணையர் டி.கிறிஸ்துராஜ், சென்னை மாநகராட்சி துணை ஆணையர் எம்.பிருத்திவிராஜ், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ்.சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.